நான் வெட்கப்பட்டுப் போவதில்லை

I Shall Not Be Ashamed

Album 29 Song 2

ஆல்பம் 29 பாடல் 2





நான் வெட்கப்பட்டுப் போவதில்லை

DATE 06 05 2007 119 சங்கீதம் - ஆலெப் (1-8)

நான் வெட்கப்பட்டுப் போவதில்லை
உம் கற்பனைகளை கண்ணோக்கும் போது
நான் என் இருதயத்தால் உம்மைத் துதிப்பேன்
உம் நீதிநியாயங்களைக் கற்றுக்கொள்ளும் போது
(ஆராதனை)

என் நடைகள் ஸ்திரப்படுமே
உம் பிரமாணங்களைக் கைக்கொள்ளும் போது
முற்றிலுமாய் என்னைக் கைவிடமாட்டீர்
உம் கட்டளைகளை நிறைவேற்றும் போது
(ஆராதனை)

நானே பாக்கியவான்
உம் வேதத்தின்படி நடக்கும் போது
நானே உத்தமமானவன்
உம் வசனத்தை நேசிக்கும் போது (ஆராதனை)

நானே பாக்கியவான்
உம் சாட்சிகளை கைக்கொள்ளும் போது
நானே யோக்கியவான்
முழு இருதயத்தோடு உம்மைத் தேடும் போது
(ஆராதனை)

நான் அநியாயம் செய்வதில்லை
உம் வழிகளில் நடக்கும் போது
நான் நீதியின் பாதையில் நடந்திடுவேன்
நீதியின் தேவனைத் தெரிந்துக் கொண்டேன்
(ஆராதனை)

ஆராதனை ஆராதனை
ஆராதனை கர்த்தருக்கே தான்


DATE
Father, Son and Holy Spirit
Jesus
above all names


நான் உம்முடைய
கற்பனைகளையெல்லாம்
கண்ணோக்கும்போது,
வெட்கப்பட்டுப்போவதில்லை
சங்கீதம். 119:6

